விலை ரூபா: 10.00

# வலம்புரி

## Valampurii

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

...து 08 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 18 ஞாயிற்றுக்கிழமை (01.04.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103

## ...ளையில் கிபீர் தாக்குதல்

(கிளிநொச்சி)

...ளை இயக்கச்சிப் பகுதி மீது அரச வான் ...யினரின் கிபீர் ரக வானூர்திகள் நேற்று ...பகல் 10 மணியளவில் குண்டுத் தாக்கு ... நடத்தியுள்ளன.மக்கள் வெளியேறிய ...யிலிருந்த வீடுகளின் மீது நடத்திய குண் ...க்குதலில் 12 வீடுகள் சேதமாகியுள்ள ...தரிவிக்கப்படுகின்றது.

...ப் பகுதியில் வசித்து வந்த மக்கள் கடந்த ... ஓகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற படை ...க்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த ...தெரிந்ததே. (ரு-5)

## மாணவர்களை முதலாம் தரத்துக்கு அனுமதிக்கும் கல்வி அமைச்சின் சுற்றுநிருபம் செல்லுபடியற்றது

### உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

அரசாங்கப்பாடசாலைகளில் மாணவர்களை முதலாம் தரத்துக்கு அனுமதிப்பதற்காக கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த சுற்றுநிருபம் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளதாக தீர்மானித்துள்ள உயர் நீதிமன்றம் அந்த சுற்றுநிருபத்தை செல்லுபடியற்றதாக்குமாறு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் தரத்துக்கு மாணவர் அனுமதி நிராகரிக்கப்பட்டதை எதிர்த்துத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பாகத் தீர்ப்பு வழங்கிய போதே உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

கல்வி அமைச்சின் அந்த சுற்றுநிருபம் காரணமாக ஊழல்களும் மோசடிகளும் இடம்பெறுவதாகத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## அன்பு வாசகர்களே!

### இன்று ஏப்ரல் பூல்

இன்று ஏப்ரல் பூல் தினம். உங்களையும் யாரேனும் ஏமாற்றலாம் அல்லவா? விழிப்பாக இருங்கள். (ரு)

## பெயர் விபரம் பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

2006/2007 ஆம் கல்வியாண்டுக்காக யாழ்.மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ். மாவட்ட செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபரிடம் பார்வையிடலாம் என யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். (ரு)

# இனப்பிரச்சினை தீர்வதை விரும்பாத அரசாங்கத் தரப்பைச் சேர்ந்த சிலர் வெளிநாடுகளை வெறுக்கின்றனர்

## ...ரிட்டிஷ் உயர்ஸ்தானிகர் கருத்து

(...காழும்பு)

...லங்கை அரசில் அங்கம் பெறும் சிலர், வெளிநாட்டவர்கள் ... உடைமைகளுடன் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென ...புகின்றனர். இது நாட்டிற்கு ஆரோக்கியமானதல்ல. இவ்வாறு ...கைக்கான உயர்ஸ்தானிகர் டொமினி சில்கோட் தெரிவித் ...ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதம் தொடர்பில் சார்க் ஆராய வேண்டும் - றோகித

(கொழும்பு)

சார்க் மாநாட்டின் பிராந்தியத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் பயங்கரவாதம்குறித்து கவனம் செலுத்தப்படவேண்டும் என வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.

14-வது சார்க் மாநாடு எதிர்வரும் 3 ஆம் திகதி இந்தியாவின் புதுடில்லியில்நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் தீவிரவாத அமைப்புக்களுக்கு நிதி கிடைக்கும் விதம் குறித்து ஆழமாக ஆராயவேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

குறிப்பாக தீவிரவாத அமைப்புக்களுக்கு சில அமைப்புக்கள் மூலம் கிடைக்கும் நிதியுதவி குறித்து கூடிய கவனம் செலுத்தப்படவேண்டுமெனவும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ...யங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் ...வாஜிலிங்கம் எம்.பி.மீது விசாரணை

(கொழும்பு)

...ழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடா... உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் ...ரவாதத் தடுப்புப் பிரிவினரால் பத்து ...தியாலம் வரை விசாரணைக்கு உட்...ப்பட்டுள்ளார்.

...ற்று முன்தினம் முற்பகல் 10 மணி ... இரவு 8 மணிவரை பயங்கரவாதத் ...ப் பிரிவினரால் தான் விசாரணை செய் ...தாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.எதிர்வரும் 3 ஆம் திகதி மீண்டும் தன்னை விசாரணைக்கு அழைத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ரு-3)

## தனியாருக்கான பொருள்களுடன் 'இந்துருவலி' கப்பல் வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டு தனியார் மொத்த வியாபாரிகளுக்கு 2 ஆயிரத்து 700 மெற்றிக் தொன் அத்தியாவசியப் பொருள்களுடன் இந்துருவலி கப்பல் கொழும்பிலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

வர்த்தக கைத்தொழில் விவசாயக் கழகங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் தனியார் மொத்த வியாபாரிகளுக்கான பொருள்கள் கப்பல் மூலம் யாழிற்குஅனுப்பி வைக்கப்பட்டதுஎனவும் அவர் குறிப்பிட்டார்.

இப் பொருள்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ...ட்டக்களப்பில் ...ளைமோர் தாக்குதல்

(மட்டக்களப்பு)

...ட்டக்களப்பில் சிறப்பு அதிரடிப் படையி... மீது நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்கு... ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ...ம் ஒருவர் காயமடைந்துள்ளார்.

...ழுங்குடாவுக்கும் களுவாஞ்சிக்குடிக் ...இடையில் சென்று கொண்டிருந்த அதி...டையின் வாகனம் மீது நேற்று மாலை ...ல் 4.30 மணியளவில் இத் தாக்குதல் ...ப்பட்டுள்ளது.

...தனிடையே வவுனியா தவசிக்குளம் ...யில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்...ில் இராணுவத்தினர் இருவர் படுகாய...துள்ளனர். இத் தாக்குதல் நேற்று பிற்...ல்1.15 மணியளவில் இடம்பெற்றது.(ரு-5)

## இலங்கையில் மனித உரிமை மீறல்

## உலகக் கோப்பை துடுப்பாட்டப் போட்டியில் அனைத்துலக மன்னிப்புச் சபை பிரசாரம்

(கொழும்பு)

இலங்கையில் அனைத்துலகக் கண்காணிப்புக்குழுவை உடனடியாக அமைக்க வேண்டும் என்ற தனது கோரிக்கைக்கு அனைத்துலக மட்டத்தில் ஆதரவு திரட்டும் முகமாக அனைத்துலக மன்னிப்புச் சபை பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அனைத்துலக மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளதாவது,

இலங்கைப் படையினதும் விடுதலைப் புலிகளினதும் உண்மையான பங்களிப்புக்கள் இல்லாமல் மனித உரிமை மீறல்களில் ஒரு செயற்திறன் மிக்க மாற்றம் வரப்போவதில்லை என நம்புகின்றோம்.

இந்தப்பங்களிப்புக்களில் மேலும் தாமதங்கள் ஏற்படுத்தாது ஒரு உடன்பாட்டை மேற்கொள்ளுதல்,செயற்திறனுள்ள அனைத்துலகக் கண்காணிப்புக் குழுவை நியமித்தல் போன்றன அடங்கும்.

கரிபியனில் அனைத்துலகத் துடுப்பாட்டப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதேசமயம் மன்னிப்புச்சபை அனைத்துலக மட்டத்தில்தனது (04 ஆம் பக்கம் பார்க்க)

## மிதிவெடி விழிப்புணர்விற்கும் பங்களிப்பிற்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04

unicef

உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007
ICC Cricket World Cup

# அறிமுக அயர்லாந்து அணி இங்கிலாந்திடம் தோல்வி

அயர்லாந்து அணியை 48 ஓட்டங்களால் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றது. மேற்கிந்திய தீவுகளில் நடைபெற்று வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் குஜானாவில் நடைபெற்ற சூப்பர் 8 ஆட்டத்தில் இங்கிலாந்து–அயர்லாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹொலின் வூட் 90 ஓட்டங்களையும் மற்றும் பீற்றர்சன், பிளின்டொப் ஆகியோர் முறையே 48,43 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அயர்லாந்து அணி சார்பாக ராங்கின் 2விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

தொடர்ந்து 50 ஓவர்களில் 267 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து அணி 48.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 48 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் ஓபிரின் 63 ஓட்டங்களையும் வைற் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக பிளின்டொப் 4 விக்கெட்டுக்களையும் பனீசர் 2 விக்கெட்டுக்களையும்வீழ்த்தினர். (ந-5)

அனுசரணை
நாளைய கனவை நனவாக்கும் இலங்கை வங்கியின்
NRFC வைப்பு
நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை இலங்கை வங்கியின் NRFC கணக்கில் வைப்புச் செய்து
ஆகக்கூடிய நன்மைகளை அடையுங்கள்.

# மனிதாபிமான அடிப்படையில் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிக்குக

## அரசு-புலிகளிடம் சமாதான சபை கோரிக்கை

தமிழ் சிங்கள புத்தாண்டின் போது மனிதாபிமான அடிப்படையில் சமாதானத்திற்கு வருமாறும் போர் நிறுத்த உடன்பாட்டைக் கைக்கொள்ளுமாறும் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் தேசிய சமாதான சபை கோரிக்கை விடுத்துள்ளது.

கட்டுநாயக்கா வான் படைத் தளம் மீது விடுதலைப்புலிகள் நடத்திய வான் தாக்குதலைத் தொடந்து தேசிய சமாதான சபை விடுத்துள்ள கோரிக்கை நாட்டின் சர்வதேச வானூர்தி நிலையத்திற்கு அருகே உள்ள வான்படைத் தளத்திற்கு நடந்த வான் தாக்குதலும் அதனை அடுத்து அரசாங்கம் விடுதலைப்புலிகள் பகுதிகள் மீது நடத்திய தாக்குதல்களும் இராணுவ நடவடிக்கைகளும் மேலும் அதிகரிப்பதையே காட்டுகின்றன.

இலங்கை இனப்பிரச்சினையில் இராணுவ நடவடிக்கையின் அதிகரிப்பும் அதற்கான எதிர்த் தாக்குதலும் நாட்டில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மனித அவலங்களில் இருந்து பொது கவனத்தை திசை திருப்புகின்றன.

மக்களின் பாதுகாப்புக்காகவும் நலத்திற்காகவும் அனைத்துலக மனித உரிமைச் சட்டங்களையும் உள்நாட்டு இடப்பெயர்வு குறித்த ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட திட்டங்களையும் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் மதித்து நடக்கவேண்டும். (ந-5)

திருமண அழைப்பு

அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான விய வருடம் பங்குனி மாதம் 18–ம் நாள் (01.04.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி 52 நிமிடம் தொடக்கம் 10 மணி 43 நிமிடம் வரையுள்ள உத்தர நட்சத்திரம் இடப லக்கினம்.
அமிர்த சித்த யோகம் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

திரு.திருமதி.சிவலிங்கம் தம்பதிகளின்
புத்திரன் திருவளர் செல்வன்
சிவஅன்பு
(உரிமையாளர்,சிவலிங்கம் ரான்ஸ்போட்)
அவர்களுக்கும்

திரு.திருமதி.ஞானேஸ்வரன் தம்பதிகளின்
புத்திரி திருவளர் செல்வி
சர்மிலா
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணை கொண்டு ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப் பெருமாள் தேவஸ்தான ஸ்ரீ லட்சுமி நாராயண திருமண மண்டபத்தில் திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் குடும்பத்தினரோடு வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்துத் தொடர்ந்து இடம் பெறும் மதிய விருந்துபசாரத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு.திருமதி க.சிவலிங்கம்.
(சிவலிங்கம் மோட்டோர்ஸ் அன் ரான்ஸ்போட்)
77 மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3212

திருமதி ஞானேஸ்வரன் சொர்ணலட்சுமி
குடும்பம்
79 செட்டித்தெரு,யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)
(704)

## கும்பாபிஷேகம்

கந்தர் மடம் இந்து சமயப் பேரவைத் தலைமையகத்தில் அமைந்துள்ள திருத்தலத்தில் அருள்பாலிக்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத தில்லை ஸ்ரீ நடராஜப் பொருமானுக்கு இன்று காலை 10.30 மணியளவில் மகாகும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது. (ந-3)

## மகாயாகம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வாரிவனம் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பங்குனி உத்தர மகாயாக நிகழ்வு இன்று காலை 8 மணியளவில் நடைபெறவுள்ளது. இதனையடுத்து மகா அபிஷேகம் இடம்பெறும். (ந-102,3)

# வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி
# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி ஆலய
# இரதோற்சவ சிறப்பிதழ் –01.04.2007


## சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளியம்மை ஆலயத்தின் வரலாறும் ,சிறப்புகளும், வழிபாட்டு முறைகளும்

யாழ்ப்பாணத்தின் வலி.மேற்குப் பிரதேசத்தில் அமைந்திருக்கும் அழகிய சிற்றூரான சங்கரத்தையின் மேற்குப் பகுதியில் நெல் வயல்களால் சூழப்பட்ட பிட்டியம்பதி என்னும் புண்ணிய தலத்திலே பத்திரகாளியம்மை வீரபத்திரர் சமேதராக கோயில் கொண்டு அடியார்களுக்கு அருள்பாலித்த வண்ணம் இருக்கிறார்.

அவ்விடத்தில் இருந்த புளியமரத்தில் அமைந்திருந்து கிளிகள் அயலிலுள்ள நெல்வயல்களில் வேளாண்மைக் காலத்தில் வேளாண்மையைச் சேதப்படுத்துவதை கண்ணுற்ற முதன்மையினர் தாமே அதனைத் தறிக்க முனைந்தார் என்றும், அப்போது அம்மரத்தினடிப் புற்றுக்குள் இருந்து வெளிப்பட்ட நாகசர்ப்பம் அவரைச் சிறிது தூரம் துரத்திச் சென்று தலை தூக்கி ஆடியதாகவும், அன்றிரவே அம்மையார் முதன்மையானரின் சொர்ப்பனத்திலே தோன்றி தமக்கு நிழல் அமைத்து வழிபடுமாறு பணித்ததையடுத்து அவ்விடத்தில் நிழல் அமைத்து வழிபடத் தொடங்கினார் என்றும், அம்மரமே இன்று தல விருட்சமாக வியாபித்து நிற்கின்றது என்றும் கர்ண பரம்பரை வரலாறுகள் கூறுகின்றன.

பிட்டியம்பதியில் கோயில் கொண்டமையினால் பிட்டியம்பதி பத்திரகாளி அம்மை என்ற நாமம் அம்பாளுக்கு ஏற்பட்டது.

சிறுகுடில் அமைத்து வழிபடத் தொடங்கிய இவ் ஆலயம் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கர்ப்பக்கிரகமும், பிள்ளையார், வைரவர் என்னும் பரிவாரத் தெய்வங்களும் அமைக்கப்பட்டு கற்கோயிலாக மாறியது. மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. விக்கிரகங்கள் அக்காலத்தைச் சேர்ந்தவை. 19–ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கொடி யேற்றத்துடன் தொடங்கிய பத்தாவது நாளான பங்குனி மாத உத்திரநட்சத்திரத்தில் தேர்த்திரு விழாவும் அடுத்த நாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்று வருகின்றது.



1978 ஆம் ஆண்டு சித்திரைத் தேர்கள் வெள்ளோட்டம் நடைபெற்றது. 1985 ஆம் ஆண்டு திருத்த வேலைகள் நடைபெற்று வைகாசி பூனர்பூச நட்சத்திரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1988 ஆம் ஆண்டு நவக்கிரக மண்டபமும்,1989 ஆம் ஆண்டு சண்டேஸ்வரர் மண்டபமும் அமைக்கப்பட்டன.

1987 ஆம் ஆண்டு மணிக்கூட்டுக் கோபுர மும் 1995 ஆம் ஆண்டு வீரபத்திர மண்டபமும் அமைக்கப்பட்டன. 2001 ஆம் ஆண்டு புனருத்தாரண வேலைகள் நடைபெற்று ஆவணி ரோகினி நட்சத்திரத்தில் கும்பாபிஷே கமும் நடைபெற்றது.

2002 ஆம் ஆண்டு வசந்த மண்டபம் மீள் நிர்மாணம் செய்யப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2003 ஆம் ஆண்டு மாசி மாதம் தெற்குப்புறத்தில் மூன்று தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. தற்போது அம்பாளுக்கு மஹாராஜ கோபுரம் ஐந்து தளத்தில் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

ஆலய அறங்காவலர்

## மஹோற்சவ பிரதம குருவின் ஆசிச்செய்தி

காளி என்பது யமுனை நதியில் உள்ள ஒரு மடு. இதில் உமையம்மை வலம்புரிச்சங்குருவாய் தவம் புரிந்தவள். இதை காளிந்தி நதியில் நீராடிய தக்கனும் வேதவல்லியும் எடுத்துவளர்த்தனர். தக்கன் செய்த தவத்தின் பயன் பங்குனி உத்தரத்தில் நடந்தது. வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதியில் அருளாட்சிபுரியும் வீரபத்திரசுவாமி சமேத பத்திரகாளி அம்பிகையின் தேர் உற்சவம் பங்குனி உத்தர நட்சத்திரத்திலன்று தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றது. இவ் தேவஸ்தான மஹோற்ச காலத்தில் அதிகாலை நான்கு மணி தொடக்கம் சிறுவர்முதல் வயோதிபர்வரை கற்பூர ஜோதியை ஏற்றி நிற்பதும் அடி அளிப்பதும் பிரதட்சணம் செய்வதும் கண்கொள்ளாக்காட்சியாகும். வட்டுக்கோட்டை இந்து இளைஞர்கள் தேவஸ்தானத்தில் பஞ்ச புராணம் ஓதி நிறைவாக இரண்டு பதிகம்பாடி இரு கைகளையும் உயர்த்தி வழிபடும் காட்சி மெய்சிலிர்க்க வைக்கும்.

பத்திரகாளி ஆச்சி சர்பமாக புற்றில்வாழ்கின்ற வடக்கு உள்வீதியில் நாதஸ்வர வித்துவான்கள் புன்நாக பராளி ராகம் வாசிப்பதும் அடியார்கள் உரு ஆடும் காட்சியே காட்சியாகும். பத்திரகாளி அம்பாளுக்கு அன்ன தானத்தை மலைபோல படைத்துவழிபடுவதும் அப்பிரசாதத்தை ஆலயத்தைச் சுற்றியிருந்து உண்பதும் புனிதமான மகேஸ்வர பூஜையாகும். அற்புதமான ஆட்சி இன்று தேரேறிவரும் காட்சியைக் காண ஆலயத்தைச் சூழவுள்ள கிராம மக்கள் திரளாக இலட்சமாக வந்து வழிபடும் இப் புனிதமான நாளில் சகல ஜீவராசிகளும் மக்களும் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புமாக வாழ வீரபத்திர சுவாமி சமேத பத்திரகாளி அம்மாவை வழிபட்டு எமது நல்லாசிகளை வழங்குகின்றோம்.

சிவாச்சாரிய திலகம்,கிரியாஜோதி சிவஸ்ரீ சு.சுந்தரராஜ குருக்கள்
(வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பிரதமகுரு)

## வடம்பிடிப்போம்! வரம்பெறுவோம்!

வட்டுக்கோட்டை சங்கரத்தைப் பிட்டியம்பதி பத்திரகாளி சமேத வீரபத்திரப் பெருமான் தேரேறிப் பவனிவரும் இந்நாளில் பத்திரகாளியின் அருட் கடாட்சம் அனைவருக்கும் கிடைக்கட்டும்! வாழ்வின் துன்பங்கள் மறையட்டும்! இன்பங்கள் மலரட்டும்! சண்டைகள் தீரட்டும்! சமாதானம் பூக்கட்டும்! பகைமைகள் கழியட்டும்! அன்பும் பாசமும் பெருகட்டும்! வசந்தங்கள் வாழ்வில் வீசட்டும்!

"வடம்பிடிப்போம் வரம்பெறுவோம் அலைகடலென திரண்டுவாரீர்!"

பவள விழா பொலிவு கண்டு இன்புறும்,இந்து வாலிபர் சங்கம்,
வட்டுக்கோட்டை. வட்டு.இந்துவாலிபர் சங்கம்,கொழும்புக்கிளை.
வட்டு இந்து வாலிபர் சங்ககனடாக்கிளை.

### "அருள்வாய் தாயே பத்திரகாளி"

அழகுமிளிர் நற்சிலைகளோடு
நற்கோபுரம் அமைத்தோய்
ஆழ நீர்க்குளம் ஏதிரே இருக்க
ஆனந்தமாயுறையும் பத்திரகாளியே

அழுது அடிபரவும் நல்லடியார்
அவலம் கேட்கவில்லையோ
எழுந்துவந்து எம்துயர் நீங்கிட
அருள்வாய் தாயே பத்திரகாளி (சங்கரத்தையூர் சபாநாதன்)

மலரமைப்பு:-
வி.கோபிகிஸ்ணா
வட்டு.இந்து வாலிபர் சங்கம்.

R.S.T.றோஸ்நாரு
அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் கொப்பரா,எள்ளு மற்றும் இலுப்பைப்பருப்பு போன்றவற்றை மூன்று கிலோ முதல் ஆயிரம் கிலோவரை உடன் இயந்திரத்தில் அரைத்து எண்ணையாக ஊற்றவும் நாடவேண்டிய ஒரே இடம்
பாலன் அரிசி ஆலை
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.
(அ-677)

பவளவிழா பொலிவு கண்டு இன்புறும்
வட்டு.இந்து வாலிபர் சங்கத்தின்
புத்தகக் களஞ்சியம்
பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகாமையில்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.
T.P.No:021 222 3038, 021 222 3896
(அ-676)

சண்முகம் களஞ்சியம்
சகலவிதமான பலசரக்குப் பொருட்களையும் தீனேஸ் வெதுப்பக உற்பத்திப்பொருட்களையும் மொத்தமாகவும்,சில்லறையாகவும் பெற்றிட
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
உரிமையாளர்:- எஸ்.சண்முகராசா
(அ-679)

ஸ்ரீ ராஜ் திருமண சேவை
சிறந்த முறையில் திருமண பொருத்துனர் சேவையை பெற்றிடவும் உள்ளூர்,வெளியூர் மணமகன், மணமகளை தங்கள் ஜாதகத்திற்கு ஏற்ற முறையில் மணம் முடிக்க நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.
தொ.பே.இல. 021 4591358

கஜமுகன் ஹாட்வெயர்ஸ்
PEPSI யாழ்.ஏகவிநியோகஸ்தர்கள்
147,149 ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
(அ-675)

வட்டுக்கோட்டைக்கான Shell Gas Agent,
கட்டடப்பொருட்கள் மற்றும் பலசரக்குப் பொருட்கள்,பாஸ்மா வகைகள், கால்நடைத் தீவனங்கள் மற்றும் அபிஷேகப் பொருட்கள் என்பவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
அம்பாள் ஸ்ரோர்ஸ் (பேபி கடை)
அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை.
(அ-674)

விஸ்வகர்மா துணை
சிவநீபன் நகையகம்
நவீன வடிவமைப்புக்களில் அழகிய தங்க நகைகளை அசல் 20 கரட் ,22 கரட் தங்க நகைகளை குறித்த நேரத்தில் ஓடர்கள் மூலம் தரமாக செய்து பெற்றுக்கொள்ளவும் ரெடிமேட் நகைகளை பெற்றுக்கொள்ளவும். தங்க நகைகளை கொள்வனவு செய்திடவும் சிறந்தமுறையில் விற்பனை செய்பவர்களும் நீங்கள் நாட வேண்டிய இடம்
சிவநீபன் நகையகம்
சங்கரத்தைச் சந்திக்கு அருகாமை,வட்டுக்கோட்டை.
உரிமையாளர் :– பா.மூர்த்தி

சத்தியம் யாருக்கும் எக்காலத்தும் துன்பம் தந்ததில்லை. தவறாகவும் அறியாமையுடனும் வாழ்பவன் தான் உண்மையில் கஷ்டப்படுவான்.

—ஒளரேலியன் மார்க்கஸ்

வலம்புரி

# இந்துமத குருமாருக்கு நடக்கும் நிந்தனை

இலங்கையில் இந்து மதம் படும்பாடு நெஞ்சத்துப் புண்ணாய் வேகிறது. இதைக்கூறும் போது சில மதவாதிகள் இக் கருத்து மதப் போரைத் தூண்டுவதாகக்கூறிக்கொள்வர்.

இத்தகைய கூற்றுக்களே மதப்போரைத் தூண்டுவதாகவும். தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டுமென சிங்கள நாளிதழ் ஒன்று கூறுமாயின் அதுபற்றி ஆராய்வதே அறிவுடமை.

இதைவிடுத்து குறித்த சிங்கள நாளிதழ் சிங்கள இனத்திற்கு விரோதமானதெனக் கூறப்படுமாயின் அதுவே நாட்டில் அழிவையும், அநியாயத்தையும் ஏற்படுத்தும்.

இந் நிலையிலிருந்து விடுபடுவதற்காகவே மீளவும் இந்துமதத்திற்கும், இந்து மதகுருமாருக்கும் இழைக்கப்படும் அநீதியை இவ் விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தற்போதைய சூழ்நிலையில் இந்து மத நிந்தனைகள் பற்றி இவ்விடத்தில் முன்னரும் குறிப்பிட்டிருந்தோம். எனினும் எதுவித பயனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

காலத்தின் ஒவ்வொரு அசைவிலும் இந்து மத குருமார் நிந்திக்கப்படுகின்றனர். இராணுவ சோதனைக் காவலரண்களில் இந்துமத குருமார் கால்கடுக்கக் காத்திருக்கின்றனர்.

இந்தப் பரிதாபம் இராணுவக் காவலரண்களில் மட்டுமல்ல. எரிபொருள் நிலையங்கள், அரச அலுவலகங்கள் என வரிசை நிற்கும் இடமெங்கும் இதனைப் பார்க்கமுடியும்.

அதிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கடைகளில் இந்து மத குருமார் காத்திருக்கும் பரிதாபம் நெஞ்சை வதைப்பதாகும். அந்தணர்கள், மதத்தலைவர்கள் என்ற வரிசைக்கு முன்னிடம் வழங்கும் முறைமை தெரியாத மூடத்தனத்தினர் மத்தியில் அவர்களும் பங்கீட்டு அட்டையை அடுக்கி காலம் வரும்வரை காத்திருக்கின்றார்கள்.

இந்து மத குருமார்களுக்கு ஏற்பட்டுள்ள இந்த மோசமான நிலை இலங்கையில் வேறு எந்த மத குருமாருக்காவது ஏற்படுமா? என்பதை எல்லோரும் நேர்மை கொண்ட நெஞ்சினராய் சீர்தூக்கிப்பார்க்கவேண்டும்.

சங்கக்கடையில் பொருள் வாங்கக் காத்திருக்கும் பரிதாபம். இதற்கு யார் காரணம் என்ற கேள்விகளுக்கு அப்பால் இந் நிலைமை எந்த ஒரு மதகுருமாருக்கும் வராது. வரவும் கூடாது.

மத குருமார் என்ற சொற்பதம் எல்லா மதங்களுக்கும் பொதுவானது. ஒரு மதத்தின் குருவுக்கு நடைபெறும் நிந்தனையின் பொருட்டு எல்லா மதகுருமாரும் கவலைகொள்ள வேண்டும்-அதனைக் கண்டிக்கவேண்டும்.

இப்போது அது கண்டு நாம் ஆறுதலடைந்தால் அதே நிந்தனை எமக்கும் ஒருநாள் வரலாம். இதுவே உலகின் நியதியாக உள்ளது என்ற உண்மை உணரப்படவேண்டும்.

அதேநேரம் மதகுருமார் மரியாதைக்கும் வணக்கத்திற்கும் உரியவர்கள். அவர்கள் மதரீதியில் மரியாதை செலுத்தப்பட வேண்டியவர்கள் என்ற நினைப்பு எவரிடமும் இருந்தலாகாது.

அத்தகைய நினைப்புகளே எதிர்காலத்தில் அழிவைத் தருவதாக அமையும்.

# விடுதலைப்புலிகளை தோற்கடிப்பது மிகவும் கடினமானது-தி எக்கொனமிஸ்ற்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் பல முனைகளில் போரிடும் வலுவை உடையவர்கள். கிழக்கில் கெரில்லாக்களாகவும் வடக்கில் மரபுவழிப் படைகளாகவும் தெற்கை ஒரு பயப்பீதியில் வைத்திருக்கும் தாக்குதல்களையும் அவர்களால் நடத்த முடியும். எப்போதும் அவர்களை தோற்கடிப்பது மிகவும் கடினமானது.

ஆசியாவில் இருந்து வெளிவரும் தி எக்கொனமிஸ்ற் சஞ்சிகை தனது ஆய்வுச்செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளது. அந்த ஆய்வின் முக்கிய பகுதிகள் வருமாறு;

போரியலில் தற்கொலைத் தாக்குதலே மிகவும் ஆபத்தான ஆயுதம்.ஆனால் விடுதலைப்புலிகள் புதிய வியூகத்திற்கு நகர்ந்துள்ளனர். தற்போது அவர்களிடம் வான்படையும் உண்டு. கடந்த மார்ச் 26 ஆம் திகதி விடுதலைப்புலிகள் தமது வான்படை மூலம் பிரதான வான்படைத் தளத்தை தாக்கியுள்ளனர். அவர்கள் தமிழ் மக்களுக்கு ஒரு தனிநாடு வேண்டி 25 வருடங்களாக இலங்கை அரசாங்கத்துடன் போராடி வருகின்றனர்.

விடுதலைப்புலிகளின் வான்படை வலு இடம்பெற்று வரும் போரில் பயங்கரமான புதியவகை உத்தி. 5 ஆண்டு கால போர்நிறுத்த உடன்பாடு பேச்சளவில் மட்டும் இருக்கும் போது போர் தீவிரமடைந்து வருகின்றது. தமது வான்படையின் இரு வானூர்திகள் கொழும்பு அனைத்துலக வானூர்தி நிலையத்திற்கு அண்மையாக உள்ள அரசாங்கத்தின் வான்படைத் தளத்தின் மீது தாக்குதல்களை நடத்திவிட்டு பாதுகாப்பாக திரும்பி வந்துவிட்டதாக விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தலைவருடன் வானோடிகள் நின்று எடுத்த படங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இந்த தாக்குதலில் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர். தளத்தில் தரித்து நின்ற வான்படையினரின் வானூர்திகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக இரு தரப்பும் முரண்பாடான தகவல்களை தெரிவித்தனர்.

இலங்கையின் தெற்குப்பகுதி பெரும்பான்மையாக சிங்கள மக்களைக் கொண்ட பகுதியாகும்.அங்கு இடம்பெற்ற இந்த தாக்குதல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மெதுவாக நகரும் இலகுரக வானூர்தி அரசாங்க கட்டுப்பாட்டுப பகுதியின் மேலாக 400 கி.மீ. (250 மைல்) தூரத்திற்கு யாரும் கண்டுபிடிக்க முடியாதவாறு பயணித்து வந்தது பெரும் சவாலாகும்.

இந்த தாக்குதலில் பாதிப்படைந்த படையினர் தமிழ் மக்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் மீது வான் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். மேலும் மார்ச் 28 ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கொக்கட்டிச்சோலையையும் படையினர் கைப்பற்றியுள்ளனர். இது விடுதலைப்புலிகளுக்கு ஒரு பின்னடைவாகும். விடுதலைப்புலிகளின் வான் தாக்குதலுக்கு முன்னரும் விடுதலைப்புலிகளின் பகுதி கடுமையான எறிகணை வீச்சுத் தாக்குதல்களுக்கு உள்ளாகி வந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களின்படி ஒரு இலட்சத்து 55 ஆயிரம் மக்கள் கடந்த 6 வாரங்களில் இடம்பெயர்ந்துள்ளனர். எதிர்வரும் தமிழ்–சிங்கள புதுவருடத்திற்கு முன்னர் கிழக்கின் முழுப்பகுதியையும் விடுவித்து விடலாம் என அரசாங்கம் நம்புகின்றது.

அரசாங்கம் வடக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதி மீது மற்றுமொரு களமுனையையும் திறந்துள்ளது. அதன் பிரதான நோக்கம் மடு தேவாலயத்தை கைப்பற்றுவது தான். அதன் நோக்கம் கிறிஸ்தவர்களின் ஆதரவை பெறுவதாகும்.

தற்போதும் அரசாங்கத்தின் பேச்சாளர்கள் பேச்சுவார்த்தை மூலமான தீர்வின் முக்கியத்துவம் தொடர்பாக வாயை திறப்பதில்லை. ஆனால் எதிர்வரும் 3 வருடங்களில் போரில் வெற்றிபெற்று விடலாம் என அதிகாரிகள் பேசுகின்றனர். இந்த பேரில் 70 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர். இதில் 2005 ஆம் ஆண்டில் ஆரம்பித்த மோதல்களில் உயிரிழந்த 4 ஆயிரம் மக்களும் அடங்குவர்.

யாராலும் கண்டுபிடிக்க முடியாதபடி தெற்கில் வந்து குண்டுகளை வீசிச்சென்ற விடுதலைப்புலிகளின் வான்படையின் வலிமை தென்பகுதிக்கு மற்றுமொரு வடிவில் போரைக் கொண்டு சென்றுள்ளது. இது கடும் போக்காளரான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கான ஆதரவை மழுங்கடித்துவிடும். கடந்த கால இராணுவ நடவடிக்கைகள் விடுதலைப்புலிகளை ஆதரிக்கும் நிலைக்கு மக்களை தள்ளியுள்ளது. (ந-5)

# புலிகளின் வானூர்திகளினால் அச்சுறுத்தல் இல்லை- இராமதாஸ்

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கமும் சிங்கள அமைப்புக்களும் கூறிவருவதனைப் போன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் வானூர்திகளினால் இந்தியாவுக்கோ அல்லது ஏனைய தெற்காசிய நாடுகளுக்கோ எந்தவித அச்சுறுத்தலும் இல்லை.

பாகிஸ்தான் வழங்கிய போர் விமானங்கள் இலங்கை வசமிருப்பதுதான் இந்தியாவுக்கு பேராபத்து. என்று பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கையில் அன்றாடம் வான்தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி தமிழர்களைக் கொன்று குவித்து வரும் இலங்கை அரசாங்கமும் அதன் இராணுவமும் விடுதலைப்புலிகளின் வான்வழித் தாக்குதல்களால் அதிர்ந்து போயிருக்கின்றனர். அச்சத்தில் மூழ்கியிருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளிடம் வானூர்திகள் இருப்பது இலங்கைக்கு மட்டுமன்றி தெற்காசிய பிராந்தியத்திற்கே அச்சுறுத்தல் என்று அலறத்தொடங்கியிருக்கின்றனர். இலங்கை அரசாங்கமும் சிங்கள அமைப்புக்களும் கூறிவருதனைப் போன்று விடுதலைப்புலிகளின் வானூர்திகளால் இந்தியாவுக்கோ அல்லது இதர தெற்காசிய நாடுகளுக்கோ எந்த அச்சுறுத்தலும் இல்லை.

அதற்கு மாறாக பாகிஸ்தான் இராணுவ ஆலோசகர்களும், வானோடிகளும் அவர்கள் அளித்த போர் வானூர்திகளும் இலங்கை படை வசம் இருப்பதுதான் இந்தியாவுக்கு பேராபத்து. நோர்வே நாட்டின் முன் முயற்சியுடன் நடந்து வந்த அமைதிக்கான பேச்சுவார்த்தையை தன்னிச்சையாக முறித்துக்கொண்டு சொந்த நாட்டின் ஒரு பகுதி மக்கள் மீது முப்படைகளையும் கொண்டு தாக்குதல் நடத்தி பல்லாயிரக் கணக்கான மக்களை இலங்கை அரசாங்கம் கொன்று குவித்து வருகின்றது.

அத்துடன் போக்குவரத்தக்குப் பயன்படும் பிரதான சாலையை மூடி பொருளாதாரத்தடையை ஏற்படுத்தி இலட்சக்கணக்கான மக்களை பட்டினிபோட்டு சாகடித்து வருகின்றது. இன்னும் சில நாட்களுக்கு அனைத்துலக சமூகம் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைக்காவிட்டால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் செத்து மடிவதனைத் தவிர்க்கமுடியாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட அமைப்பு அறிவித்திருக்கின்றது.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒன்றாக வாழ்ந்து வந்தவர்கள் என்பதனை மறந்துவிட்டு போஸ்னியா மக்கள் மீது பெரும் தாக்குதல் நடத்தி ஒரு இனத்து மக்களை கொன்று குவித்த சேர்பிய நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மிலோஸ்விக்கின் கொடுங்கோண்மைக்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தற்போதைய நடவடிக்கைகளுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை.

மிலோஸ்விக் எத்தகைய குற்றங்களுக்காக விசாரணைக்குட்படுத்தப்பட்டாரோ அத்தகைய குற்றங்களை எல்லாம் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புரிந்து வருகின்றார். எனவே அவரது உபதேசத்திற்கும் அலறலுக்கும் இந்திய அரசாங்கமும் அனைத்துலக சமூகமோ செவிசாய்க்கக்கூடாது.

ஈழத்தமிழர்கள் நியாயமான அரசியல் உரிமைகளுக்காக போராடி வருகின்றார்கள். அதற்கு இதுவரையில் அவர்கள் கொடுத்துள்ள விலை போதும். எனவே இந்தியாவும் அனைத்துலக சமூகமும் இனியும் நடப்பது நடக்கட்டும் என்று பார்த்துக்கொண்டிருக்காமல் சமரசப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

ஈழத்தமிழர்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளும் அடிப்படை மனித உரிமைகளும் நிலைநாட்டப்படவேண்டும். இதற்கு இலங்கை அரசாங்கத்தை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும். இல்லையெனில் பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்குள் நுழைந்துவிடும். இந்த ஆபத்தைத் தடுக்க இந்திய அரசாங்கம் சமரசப்பேச்சுவார்த்தைக்கான நடவடிக்கைகளை உடனே தொடங்கவேண்டும்.

இலங்கையில் பட்டினியால் வாழும் ஈழத்தமிழர்களுக்காக அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் இந்திய அரசாங்கம் செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் அனுப்பிவைக்கவேண்டும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# ஆங்கில மூல கணித பாடநெறிக்கு தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில மூல கணித பாடநெறிக்கு பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தமது அனுமதிக்கடிதத்தையும் படிவங்களையும் கல்லூரியில் இம் மாதம் 5 ஆம் திகதி பெற்று பதிவினை முன்னர் மேற்கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.யோகநாதன் கேட்டுள்ளார்.

பி.அரவிந்தன் (வீமன்புலம் இமையாணன் கிழக்கு), கே.சிவராசா (துங்காலயா வீதி, தும்பளை), ஆர்.கீர்த்திகா (வி.சி.லேன், கோப்பாய் தெற்கு), கே.கார்த்திகா (கெரலிவத்தை வீதி, நீர்வேலி வடக்கு), எஸ்.சந்திரகாந்த் (40/2 கலைமகள் வீதி அரியாலை), ஏ.பிரசாந்தன் (ரதிவாசா நெல்லியடி), ஆர்.சுகாசினி (பெருங்குளம் றோட், கல்வயல்), ஜெ.பிரதிராஜ் (மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை), ஏ.சுபாகரன் (அல்லையம்பதி,துன்னாலை), ரி.கோபனா (17/2 டபிள்யு.எ.சில்வா வீதி, கொழும்பு 06), எஸ்.ரஜிதா (வியாபாரி மூலை), எஸ்.சுஜித்தா (சண்டிலிப்பாய் வடக்கு), எஸ்.துளசிகாயினி (இணுவில் மேற்கு) (ந)

## தந்தை செல்வாவின் பிறந்த தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

தந்தை செல்வாவின் 109-வது பிறந்த தின நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணியளவில் தந்தை செல்வா அறங்காவலர் சபை தலைவர் வணபிதா. ஜெபநேசன் தலைமையில் யாழ்.செல்வா சதுக்கத்தில் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.இதேவேளை எதிர்வரும் 26 ஆம் திகதி நினைவு தினத்தைச்சிறப்பாகக் கொண்டாடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ந-132,3)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் பகுதி நேர ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம் வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரனால் கோரப்பட்டுள்ளது.

இப் பதவிக்கு விண்ணபிப்போர் க.பொ.த. (உயர் தரம்)ல் மூன்று பாடங்களில் சித்தியும் க.பொ.த. (சாதாரண தரம்)ல் ஆங்கிலப் பாடத்தில் விசேட சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்போர் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணபத்தை வலயக் கல்விப் பணிப்பாளர்,வலிகாமம் கல்வி வலயம்,மருதனார்மடம், சுன்னாகம் என்ற முகவரிக்கு ஏப்ரல் 16 ஆம் திகதிக்கு பிந்தாமல் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

விண்ணபதாரிகள் எழுத்துப்பரீட்சையின்அடிப்படையிலும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப் படுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## இந்துக் குருமாருக்கு விசேட அ.அட்டை

போக்குவரத்தத் தடைகள் நடைமுறைப் படுத்தப்படும் நேரங்களில் இந்து சமய குருமார்கள் தாமதமின்றி ஆலயங்களுக்குச் செல்வதற்கு வசதியாக விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

எனவே இந்து சமயகுருமார்கள் தங்கள் பிரிவு பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு விபரங்களைப்பதிவு செய்து கொள் ளுமாறு யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் கேட்டுள்ளார். (ந)

## உலகக் கோப்பை துடுப்பாட்ட போட்டியில்...

கோரிக்கைக்கு ஆதரவு தேடும் முயற்சியையும் மேற்கொண்டுள்ளது.

துடுப்பாட்டப் போட்டியில் சுயாதீனமாக நடுவர்கள்தான் முக்கிய முடிபுகளை எடுப்பதுடன் விதிகளையும் மேற்பார்வை செய்பவர்கள். அதேபோலவே இலங்கை அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஏனைய ஆயுதக் குழுக்களும் சுயாதீன கண்காணிப்புக்குழுவை அனுமதிப்பதன்மூலம் அவர்கள் விதிகளின் அடிப்படையில் விளையாடுகின்றார்களா? என்பதனை உறுதி செய்தல் வேண்டுமென விளக்கும் பிரசுரங்கள் விநியோகிக் கப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலியா , பாஹமாஸ், பெர்முடா, இந்தியா, நேபாளம், பிரிட்டன் போன்ற நாடுகளின் மன்னிப்புச்சபை அதிகாரிகள், அரசியல்வாதிகள், துடுப்பாட்ட ரசிகர்கள் ஆகியோரால் இலங்கையில் அனைத்துலக மனித உரிமைகள் கண்காணிப்புக்குழுவை அமைக்கும் முயற்சிக்கு பொதுமக்களினதும் அரசியல்வாதிகளினதும் ஆதரவை திரட்டும் பிரசாங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

விதிகளின் அடிப்படையிலேயே விளையாடுங்கள் என்று இலங்கை அரசாங்கத்திடம் விடுக்கப்படும் கோரிக்கையில் ஆயிரக் கணக்கான மக்கள் இணைந்துள்ளனர்.

இலங்கையில் உள்ள மனித உரிமைகளின் நிலைமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகப் பொதுச் சேவைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரசாரம் இலங்கையின் துடுப்பாட்டக் குழுவை நோக்கிய பிரசாரம்அல்ல என்பதனை நீங்கள் தயது செய்துபுரிந்து கொள்ள வேண்டும்எனத் தெரிவித்துள்ளது. வீடியோ புகைப்படங்கள், கையொப்பம் இடப்பட்ட துடுப்பாட்ட பந்துகள் போன்றவற்றை அனைத்துலக மன்னிப்புச் சபை இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப்புலிகளுக்கு வழங்கி அவர்களை அனைத்துலக மனித உரிமை கண்காணிப்பாளர்களை அனுமதிக்கும்படி கோரும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## தனியாருக்கான...

கப்பலால் இருந்து இறக்கப்பட்டவுடன் குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்கள் தட்டுப்பாடின்றியும் கட்டுப்பாட்டு விலையிலும் பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். (ந-5)

## மாணவர்களை...

தீர்மானித்துள்ள உயர் நீதிமன்றம், அதனை இரத்துச்செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளது.

பாடசாலை மாண்வர்களை அனுமதிப்பதற்காக உரிய சுற்றுநிருபத்தை உருவாக்குமாறும் உயர் நீதிமன்றம் ஜனாதிபதியின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா வழங்கிய தீர்ப்பில் புதிய சுற்றுநிருபத்திற்கான யோசனைகள் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய சுற்றுநிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை வெளியிடுவதற்கு முன்னர் உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் ஜனாதிபதியின் செயலாளருக்கு உயர் நீதிமன்றத்தினால் உத்தரவிடப்பட்டுள்ளது.(ந-5)

## பயங்கரவாதம் தொடர்பில்...

அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இலங்கை, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஜனாதிபதிகளுக்கு கூடுதலாக பாதுகாப்பு வழங்கப்படவிருப்பதாகத் தெரிவிக் கப்பட்டது.

இந்தியாவின் தலைநகர் புதுடில்லியில் எதிர்வரும் 3 ஆம் 4 ஆம் திகதிகயில்நடைபெறவுள்ள சார்க் தலைவர்களின் மாநாட்டின் போது இலங்கையின் தற்போதைய நிலைமைகள் குறித்துக் கூடிய கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இம்முறை சார்க் மாநாட்டில் அமெரிக்கா , யப்பான், சீனா, வடகொரியா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். இந்த நிலையில் சார்க் வெளிவிவகார அமைச்சின் செயலாளர்களின் மாநாடு புதுடில்லியில் விஜய பவன் சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன்ன தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டார்கள்.இதே வேளை சார்க் வெளிவிவகார அமைச்சர்களின் மாநாடு இன்று நடைபெறவுள்ளது.

சார்க் அமைப்பில் புதிதாக அங்கத்துவம் பெற்றுள்ள ஆப்கானிஸ்தான் இம்மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளதுகுறிப்பிடத்தக்கது.(ந-3)

## அரசாங்கத்...

உலகத்தைப் புறந்தள்ளிவிட்டு எந்தவொரு நாடும் தமது நோக்கங்களை அடைய முடியாது என்றும் அவர் கூறினார். பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏற்பாடு செய்திருந்த சர்வதேச பாடசாலைகளுக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில்உள்ள ஒரு பிரிவினர் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்களை விரும்பாதவர்கள் போல்நடந்து கொள்கின்றனர் என்பதை ஊடகங்கள் வாயிலாக அறியமுடிகின்றது.

இத்தகையவர்கள் இனப் பிரச்சினையை சமாதான முறையில் தீர்ப்பதற்கு எதிரானவர்களாகவேயிருக்கின்றனர்.உலகமயமாக்கல் என்ற சித்தாந்தப்படி ஒரு நாட்டின் நோக்கம் ஏனைய நாடுகளின் நோக்கங்களுடன் தொடர்புபட்டுள்ளன என்றும்அவர் கூறினார். (ந-3)







## மரண அறிவித்தல்

### எஸ்.ஜே.செல்லத்துரை அவர்கள்

(தலைமைக் கிராம உத்தியோகஸ்தர் (அதி விசேட தரம்) பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்)



| மண்ணில் மலர்வு | விண்ணில் நிறைவு |
|---|---|
| 1951 - 02 - 06 | 2007 - 03 - 29 |

யாழ்ப்பாணம் மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும் யாழ்.சுண்டுக்குளி இல.45, றக்கா லேன் என்ற முகவரியை வதிவிடமாகவும் கொண்ட எஸ்.ஜே.செல்லத்துரை அவர்கள், 2007.03.29 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அமரர் கந்தையா செல்லத்துரை (முன்னாள் அரசாங்க சேவை, பொதுச் சேவைத் தொழிலாளர் சங்கத் தலைவர்),திருமதி டெய்சி செல்லத்துரை ஆகியோரின் அன்பு மகனும், திருமதி செ.மங்களேஸ்வரி (மாலா - அரச முகாமைத்துவ உதவியாளர், வலயக் கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம், முன்னாள் யாழ்.மாநகரசபை உத்தியோகஸ்தர்) அவர்களின் பாசமிகு கணவரும், செல்விகன், பவித்திரா (கனடா), தாரகா (இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளை),சாகித்தியா (மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செல்வன் ஹரித்திரா (மாணவன் - சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் நேசமிகு தந்தையும்,

கணேசபாலன்,ரஜினி, மகேந்திரா , நாளினி,சுரேன், ராஜன்,தர்ஷினி, லோஜினி, ரவி, கெனா, சனா , ரூபினி ஆகியோரின் பேரன்புச் சகோதரனும், திருமதி ரோகினி மகேந்திரா அவர்களின் அன்பு மைத்துனரும், செல்வன் மிதுன்ராஜ், பிரிதிவிராஜ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2007.04.01) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காகப் பூதவுடல் பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

முகவரி:- இல.45, றக்கா லேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்;
திருமதி செ.மங்களேஸ்வரி(மனைவி)
திரு.செ.மகேந்திரன் (சகோதரன்)

(792)


## யா/ஊரெழு கணேச வித்தியாசாலை பழைய மாணவர் சங்க
## அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம் :- 06.04.2007 வெள்ளிக்கிழமை
நேரம் :- காலை 9.30 மணி
இடம் :- பாடசாலை பிரதான மண்டபம்

இப் பாடசாலையில் கல்வி கற்ற அனைத்து பழைய மாணவர்களும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து சங்கத்தினை உதயமாக்கி அங்கத்தவராகும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


திரு.சி.திரிகரன்
தலைவர்

ந.து.ஜெகதீஸ்வரன்
செயலாளர்

(793) பாடசாலை அபிவிருத்திச் சங்கம்


## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலி.கிழக்குப் பிரிவின் செயற்குழு உறுப்பினரும் இ.செ.சங்கத்தின் யாழ்.மாவட்டக் கிளையின் முன்னாள் போசகருமான,



**எஸ்.ஜே. செல்லத்துரை** (கிராம உத்தியோகஸ்தர்).

*என் உயிர் நண்பனே!பாசத்தின் விளைநிலமே!*
*தேடுகின்றேன் உனை எங்கு சென்றாய்*

இ.மயில்வாகனம் (J.P.)
செயலாளர் இ.செ.சங்கம்
வலி.கிழக்கு, கோப்பாய்

(C-672)

## கண்ணீர் அஞ்சலி

இ.செ.ச.யாழ்.மாவட்டக் கிளையின் முன்னாள் போசகரும் கோப்பாய் பிரிவின் செயற்குழு உறுப்பினருமான,



**எஸ்.ஜே.செல்லத்துரை** (கிராம உத்தியோகஸ்தர்)

*என் இணைபிரியாத நண்பனே! உன் இழப்பின் துயரம்*
*தாளாத சோகமாய் இசைக்க பிரிவுத் துயரில் வாடும்*

கு.பாலகிருஷ்ணன்
உப தலைவர்
இ.செ.ச. யாழ்.மாவட்டக் கிளை.

(C-671)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.